# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.146/2023</u>

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜ்குமார் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1ம் மனுதாரர் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இறந்துபோன மதியழகனை எனக்கு ஏற்கனவே தெரியும். எங்களுடைய வயலுக்கு அருகில் அவருடைய வயல் உள்ளது. விபத்து நடக்கும் போது காலை 06.30 மணி. சென்னையிலிருந்து திருச்சி செல்லும் சாலையில் விபத்து நடந்தது. இறந்துபோன மதியழகனின் வீடு தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பாடாலூரிலிருந்து ஊட்டத்தூர் செல்லும் வழியில் உள்ளது. நான் விபத்து சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இடது கை, வலது கால், தலை மற்றும் முகத்தில் மதியழகனுக்கு அடிப்பட்டது. அன்று அவர் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. விபத்து சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கும், மதியழகனுக்கும்

இடையே சுமார் 30 அடி இடைவெளி இருந்தது. மண்ரோட்டில் சென்றிருந்தால் மதியழகன் விபத்தை தவிர்திருக்கலாம் என்றால் அவர் ரோட்டின் இடதுபுறமாக சென்றார். அங்கு மண்ரோடு கிடையாது. அங்கு ஆங்கில் உள்ளது. நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள படி விபத்து நடக்கவில்லை என்றும், விபத்தை நான் பார்க்கவில்லை என்றும், 1ம் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து இறந்துபோன மதியழகனின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.